DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF DISTRICT MUNCIF CUM JUDICIAL MAGISTRATE, NANNILAM

| | | |
|---|---|---|
| Case No. | : | CC. 34/2021 |
| Deposition of witness | : | PW-6 |
| Name | : | கபிலன் |
| Father's /Husband Name | : | நாகராஜன் |
| Village | : | தாம்பரம் |
| Taluk | : | தாம்பரம் |
| Age | : | 32 |
| Occupation | : | காவல் உதவி ஆய்வாளர் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 2nd day May, 2024. Accused absent petition U/sec. 317 Cr.P.C filed and allowed.

**முதல் விசாரணை:-**

நான் தற்போது தாம்பரம் காவல் கட்டுப்பாட்டு அறையில் பணிபுரிந்து வருகிறேன். கடந்த 25.10.2020-ல் பேரளம் காவல் நிலையத்தில் நான் உதவி ஆய்வாளராக பணியில் இருந்த போது நிலைய பொறுப்பில் இருந்த தலைமைக்காவலர் சாமிநாதன் என்பவரிடம் ஸ்ரீதேவி என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று பேரளம் காவல் நிலைய குற்ற எண்.2308/2020 சட்டப்பிரிவுகள் 294(பி), 352, 506(1) இ.த.ச மற்றும் பிரிவு 4 தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது. அந்த வழக்கை எனது விசாரணைக்கு எடுத்துக்கொண்டு கடந்த 25.10.2020-ம் தேதி மாலை 04.00 மணிக்கு இவ்வழக்கின் சம்பவ இடம் சென்று சாட்சிகள் விஸ்வநாதன், ராஜசேகர் ஆகியோர்கள் முன்னிலையில் பார்வையிட்டு பார்வை மகஜர், மாதிரி வரைடம் தயார் செய்து சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றேன். அந்த பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் முறையே **அ.சா.ஆ.3** மற்றும் **அ.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்பு பட்டியல் சாட்சிகள் 1 முதல் 6 வரையிலானவர்களை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். எனது விசாரணையில் சம்பவம் உண்மை என தெரியவந்ததால் இவ்வழக்கில் சம்பந்தப்பட்ட எதிரியை தேடி வந்த நிலையில் நீதிமன்ற பிணையில் சென்றுவிட்டதால் அவரை இவ்வழக்கில் கைது செய்யவில்லை. மேலும், இவ்வழக்கினை பதிவு செய்த தலைமைக்காவலர் சாமிநாதன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். இத்துடன் எனது விசாரணையை முடித்து எதிரி மீது சட்டப்பிரிவுகள் 294(பி), 352, 506(1) இ.த.ச மற்றும் பிரிவு 4 தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின் கீழ் குற்ற இறுதி அறிக்கை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேன்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:-**

அ.சா.1 ஸ்ரீதேவி எனது விசாரணையில், எதிரியின் மாடு அ.சா.1-ன் மாட்டை முட்டி ரத்தம் வந்ததாக ஏதேனும் கூறியுள்ளாரா என்றால், அவ்வாறு கூறவில்லை ஆனால் எதிரியின் மாடு முட்டியதால் அ.சா.1-ன் மாடு ஓடியதாக கூறியுள்ளார். அ.சா.1 எனது விசாரணையில் அவரது தாயாருக்கு காயம் ஏற்பட்டதாக கூறியுள்ளாரா என்றால் உள்காயம் ஏற்பட்டதாக கூறியுள்ளார். அ.சா.1-ன் தாயார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றதற்காக ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான், அவர் மருத்துமனைக்கு சென்று சிகிச்சை பெறாததால் தாக்கல் செய்யவில்லை. அ.சா.1-ன் தகப்பனார் பெயர் என்னவென்றால், ரவி. அ.சா.1-ன் தகப்பனார் எதிரியின் தகப்பனார் மீதும், சித்தப்பா மீதும் ஏற்கனவே ஒரு புகார் அளித்துள்ளார் என்றால், நான் அந்த சமயத்தில் பணி புரியாததால் அதைப்பற்றி தெரியவில்லை. எதிரி மீது திருவாரூர் அமர்வு நீதிமன்றத்தில் வழக்கு நடந்து வருகிறதா என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. அந்த வழக்கை பற்றி சாட்சிகள் எனது விசாரணையில் கூறியுள்ளாரா என்றால் இல்லை. சொத்து பிரச்சனை உள்ளதாக சாட்சிகள் எனது விசாரணையில் கூறியுள்ளார்களா என்றால் இல்லை, ஆனால், விசாரித்த போது சொத்து பிரச்சனை உள்ளதாக கூறினார்கள். எதிரியின் தகப்பனார் 14.11.2016-ல் அ.சா.1-ன் தகப்பனார் மீது ஏற்கனவே ஒரு புகார் அளித்துள்ளார் என்றால், நான் அந்த சமயத்தில் பணி புரியாததால் அதைப்பற்றி தெரியவில்லை. எதிரி மீது அ.சா.1 தரப்பினர் ஏற்கனவே கொடுத்திருந்த வழக்கு தள்ளுபடியாகிவிட்டதால் இந்த வழக்கை பொய்யாக தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. அ.சா.1-ன் காயத்திற்கும், இவ்வழக்கிற்கும் எந்த தொடர்பும் இல்லை என்றால் சரியல்ல. இவ்வழக்கு பொய்யான வழக்கு என்றால் சரியல்ல.

(ஓம். M.S. பாரதிதாசன் M.L.,)
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், நன்னிலம்.